# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆம் திகதிய***
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.08.16 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## குடியியல் வான்செலவு (திருத்தம்)

***2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

*வாசகம் 2 :* இவ்வாசகம் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியினை திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வானூர்தி சேவைகளை வழங்குவதற்காக நியமிக்கப்படவேண்டிய ஒன்றுக்கு மேற்பட்ட சேவை வழங்குநர்களுக்கு ஏற்பாடு செய்வதும், சேவை வழங்குநரொருவரின் நியமனம் தொடர்பில், சேவை வழங்குநரொருவராக எந்தவொரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது கம்பெனியொன்றின் அரசாங்கம் பெரும்பான்மையான பங்குகளைக் கொண்டுள்ளதோ அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது கம்பெனியொன்றின் அத்தகையவாகவுள்ள நியமனம் செய்வதிலிருந்த மட்டுப்பாட்டை அகற்றுவதுமாகும்.

ச. வ.- ஓ. 29/2023

## 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்          ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில், (உ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்

"(உ) முப்பத்தியோரம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வானூர்தி நிலையத்தில் அப்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ) அல்லது (க) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வான் வழிச் சேவைகளை வழங்குவதற்கான சேவைவழங்குனர்களாக இருப்பதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை நியமிக்கலாம்:

ஆயின், 31 ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் வானூர்தி நிலையத்தில் அதன் கண் குறித்துரைக்கப்பட்ட வான்வழிச்சேவைகளை வழங்குவதற்காக இப்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சேவை வழங்குநரொருவர் சம்மதிக்காதவிடத்து, அமைச்சர் இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வான்

வழிச்சேவைகளை வழங்குவதற்கு வேறு எவரேனும் சேவை வழங்குநரை நியமிக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.